


மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை (DTCP) நாமக்கல்

எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் கிராமம், 87.கவுண்டம்பாளைம் ஊராட்சி, சர்வே எண்: 242/1B, 3B –ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப் பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லாத பகுதி).

அளவு : 1 : 400

இணையதள எண் : NKL /3S32DJF9/ 2025/ TCP

குறிப்பு :

1. மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.62 ஏக்கர் (அ) 2510.00 ச.மீ
2. மனைப்பிரிவு எல்லை .....
3. உத்தேச சாலை .....
4. நிலையில் உள்ள சாலை .....
5. கோரிய மனைகள் : 12
6. ஒதுக்கிய மனைகள் : 12
7. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

(அ) உத்தேச சாலைகள் (ம) மூலை முடக்குகளின் பரப்பளவு = 730.49 ச.மீ

(ஆ) ஒதுக்கப்படவேண்டிய 10% பூங்காவிற்கான பரப்பு = (மனைப்பிரிவின் மொத்தபரப்பு - சாலைகளின் மொத்தப்பரப்பு) X (10 /100)

= (2510.00 - 730.49) X (10/100)

= (1779.51) X (10 /100)

= 177.95 ச.மீ

(அரசானை எண் 18-ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 4.2.2019-ன் படி அரசு வழிக்காட்டி மதிப்பின்படி OSR பரப்பிற்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது.)

பொது ஒதுக்கீடுகள் :

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலான மீதமுள்ள பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

8. பொது உபயோகம் (TNCDBR, 47(8))-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு

1. உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீட்டின் பரப்பளவு (HAND OVER TO LOCAL BODY- Deed No. 7504/2025, Dt. 19/08/2025) = 9.05 ச.மீ (0.50 %)
2. TANGEDCO - க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு (HAND OVER TO TANGEDCO - Deed No. 7503/2025, Dt. 19/08/2025) = 9.05 ச.மீ (0.50 %)
3. சாலையின் பரப்பளவு (HAND OVER TO LOCAL BODY- Deed No. 7504/2025, Dt. 19/08/2025) = 730.49 ச.மீ

மூலை முடக்கு : 9.0மீ சாலைக்கு 1.50மீ X 1.50மீ

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்,எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண்.181 ஊரக வளர்ச்சித்துறை நாள் 09.12.2020 -ன்படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. அரசானை எண் 18-ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 4.2.2019-ன் படி அரசு வழிக்காட்டி மதிப்பின்படி OSR பரப்பிற்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர், அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில்/கிரயப்பத்திரம், குத்தகை பத்திரம்/பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம்.இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கத அல்ல.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிங்கள் கட்டப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT LINE, LT LINE, மற்றும் TELEPHONE LINE, செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
13. உத்தரவு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
14. அரசானை எண் 18-ன், வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 08.10.2025 ன் படி தொலைதொடர்பு கம்பிகளுக்கு இடமளிக்கும் வகையில் குறைந்தபட்சம் 0.15மீ விட்டம் கொண்ட வெற்று குழாய்கள் (பெரிய அளவிலான HUME குழாய்கள் /HDPE குழாய்கள்) மனைப்பிரிவு சாலைகளின் வெளிப்புற விளிம்புகளில் அமைக்கப்பட வேண்டும்.

Approval No: SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO. 313/2025

E- Sign. _____

உதவி இயக்குநர்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

நாமக்கல்

திருமதி.
வரைவா

திருமதி.பொ.யமுனாதேவி
மேற்பார்வையாளர்/
வரைவாளர் நிலை-2

Signature valid
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2025.12.29 16:53:04

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Namakkal
Date:2026.02.03 20:15:11